இந்து சமய அறநிலைத்துறையின் சார்பில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பண்ணாரி மாரியம்மன் திருக்கோவில் வளாகத்தில் 27 இணைகளுக்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி திருமணத்தை நடத்தி வைத்து தலா ரூ.75 ஆயிரம் மதிப்பிலான சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சந்தோஷினி சந்திரா, துணை மேயர் வி.செல்வராஜ், இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் பரஞ்ஜோதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

14ம் தேதி முதல் 31ம் தேதி வரை

நாகை மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!

நாகை, ஜூலை 11 - நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

1924ம் ஆண்டு திருக்குவளையில் பிறந்த மண்ணின் மைந்தன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்14 வயதில் தனது பொதுவாழ்க்கையை தொடங்கி 80 ஆண்டு காலம் பொது வாழ்க்கை, தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் 13 முறை நின்று, 13 முறையும் வென்று 60 ஆண்டுகள் சட்ட மன்றத்தில் பணியாற்றிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 20 ஆண்டுகள் தமிழ்நாடு முதல்வராகவும், 50 ஆண்டுகள் கழகத்தின் தலைவராகவும் பணியாற்றிய இந்திய அரசியலில் பல பிரதமர்களை, குடியரசு தலைவர்களை உருவாக்கிய கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாகை மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் கீழ் கண்ட விவரப்படி நடைபெற உள்ளது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

தேதி - பொதுக்கூட்டம் நடத்தும் ஒன்றிய, நகர, பேரூர், - தலைமைக் கழக பேச்சாளர்கள்

14.7.2023 - வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம் - மதுரை சாதுராசன்,

15.7.2023 - கீழையூர் மேற்கு ஒன்றியம் - ஈரோடு இளையகோபால் ஆரூர் மணிவண்ணன்

16.7.2023 - கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் - பவானிகண்ணன்

17.7.2023 - திருமருகல் தெற்கு ஒன்றியம் - பொன்னேரிசிவா

18.7.2023 - திட்டச்சேரி பேரூர் - தூத்துக்குடி சரத்பாலா நாகை நாகராஜன்,

19.7.2023 - வேதாரண்யம் மேற்கு ஒன்றியம் - போடி.காமராஜ்,

20.7.2023 - நாகூர் நகரம் - திருச்சி சேகர்,

21.7.2023 - கீழையூர் கிழக்கு ஒன்றியம் -கந்திலிகரிகாலன்

22.7.2023 - நாகை தெற்கு ஒன்றியம் - பசும்பொன்இரவிச்சந்திரன்

23.7.2023 - திருமருகல் வடக்கு ஒன்றியம் - சைதை சாதிக்

24.7.2023 - நாகை நகரம் - ஈரோடுஇறைவன்

25.7.2023 - வேதாரண்யம் நகரம் - கரூர்முரளி

26.7.2023 - தலைஞாயிறு பேரூர் - தக்கோலம். தேவபாலன்

27.7.2023 - வேளாங்கண்ணி பேரூர் - ஆடுதுறை உத்திராபதி

28.7.2023 - கீழ்வேளூர் பேரூர் - சேலம்சுஜாதா

29.7.2023 - தலைஞாயிறு ஒன்றியம் - எழும்பூர் கோபி

30.7.2023 - நாகை வடக்கு ஒன்றியம் - திருப்பூர் ரஜினிசெந்தில்

31.7.2023 - கீழ்வேளூர் தெற்கு ஒன்றியம் - கம்பம் பாண்டித்துரை நாகை நாகராஜன்

குறிப்பு.

ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் தங்கள் பகுதியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தினை தேர்வு செய்து, துண்டு பிரசுரம் தியார் செய்து அதை அனைத்து கிளை, வார்டுகளில் வழங்கி பொதுக் கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள செய்து கலைஞர் அவர்களின் புகழை உயர செய்திட வேண்டும்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கையில் கூறியுள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒன்றியம், ஜெகதளா பேரூராட்சி, காரக்கொரை பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதியின் மூலம் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அரசு துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சை தெற்கு மாவட்டம் முழுவதும்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டங்கள் - கருத்தரங்கங்கள்!

மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இந்திய அரசியல் வரலாற்றின் நாயகன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தஞ்சை தெற்கு மாவட்டம் முழுவதும் கீழ்க்கண்டவாறு பொதுக்கூட்டங்கள், கருத்தரங்கங்கள் நடைபெற உள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், வட்டம், கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்புஅணிகளின் நிர்வாகிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாள்	நிகழ்ச்சி	சிறப்புரை	நிகழ்ச்சி ஏற்பாடு
14.07.2023 வெள்ளி	பொதுக் கூட்டம்	திருச்சி என்.சிவா எம்.பி கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் .	மதுக்கூர் ஒன்றியம்
14.07.2023 வெள்ளி	பொதுக் கூட்டம்	பசும்பொன் ரவிசந்திரன்	சேதுபாவா சத்திரம் தெற்கு ஒன்றியம்
15.07.2023 சனி	பொதுக் கூட்டம்	பசும்பொன் ரவிசந்திரன்	பட்டுக்கோட்டை மேற்கு ஒன்றியம்
22.07.2023 சனி	பொதுக் கூட்டம்	ஆடுதுறை மு.உத்திராபதி கழக இலக்கிய அணி துணை செயலாளர்	பட்டுக்கோட்டை வடக்கு ஒன்றியம்
23.07.2023 ஞாயிறு	பொதுக் கூட்டம்	ஆடுதுறை மு.உத்திராபதி கழக இலக்கிய அணி துணை செயலாளர்	பேராவூரணி வடக்கு ஒன்றியம்
02.08.2023 புதன்	பொதுக் கூட்டம்	நாஞ்சில் சம்பத்	அதிராம்பட்டினம் நகரம்
15.08.2023 செவ்வாய்	கருத்தரங்கம்	சுப.வீரபாண்டியன் திராவிட இயக்க தமிழர் பேரவை நிறுவனர்	தஞ்சை தெற்கு மாவட்டக் கழகம்
20.08.2023 ஞாயிறு	பொதுக் கூட்டம்	ஆ.இராசா எம்.பி கழக துணை பொதுச் செயலாளர்	தஞ்சை தெற்கு மாவட்டக் கழகம்
10.09.2023 ஞாயிறு	பொதுக் கூட்டம்	ஆ.இராசா எம்.பி கழக துணை பொதுச் செயலாளர்	திருவோணம் தெற்கு ஒன்றியம்

கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ.
செயலாளர்
தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் 48 செயற்கைக் கோள்கள்!

வாஷிங்டன், ஜூலை 11 - அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் விண்வெளி நிறுவனம் ஸ்பேஸ் எக்ஸ். இது குறைந்த செலவில் செயற்கைக்கோள்கள் மற்றும் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பி வருகிறது.

அந்தவகையில் தற்போது கலிபோர்னியாவின் வான்டர்பெர்க் ஏவுதளத்தில் இருந்து 48 ஸ்டார் லிங்க் செயற்கைக்கோள்கள் அனுப்பப்பட்டன.

பால்கன்9 வகை ராக்கெட் மூலம் அனுப்பப்பட்ட இந்த செயற்கைக் கோள் அதன் சுற்றுப்பாதையில் நிறுத்தப்பட்டது. இதன்மூலம் இணையம் முற்றிலும் கிடைக்காத இடங்களுக்கும் குறைந்த செலவில் அதிவேக இணையத்தை ஸ்டார் லிங்க் செயற்கைக் கோள்கள் வழங்கும் என ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தருமபுரி மாவட்டம், அரூர் அரசு மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் முடிவுற்ற திட்டப்பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (09.07.2023) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் கூடுதல் இயக்குனர் மரு.இளங்கோ மகேஸ்வரன், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.ம.சாந்தி, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.ஆர்.கே.ஜெயந்தி உட்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! எம்.பரமசிவம் வரவேற்புரை! கந்தர்வக் கோட்டை தெற்கு

ஒன்றிய தி.மு.கழக அலுவலகம் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைக்கின்றனர்!

பெரியண்ணன் அரசு - கவிச்சுடர் கவிதைப்பித்தன் - எம்.எம்.அப்துல்லா -த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை ஜூலை.11- புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக் கோட்டை தெற்கு ஒன்றிய திமு கழக அலுவலகத்தை இன்று (11.07.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணியளவில் பட்டுக்கோட்டை சாலை கந்தர்வக்கோட்டையில் சட்டம் நீதிமன்றங்கள் ஊழல் தடுப்பு மற்றும் சிறைத் துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான எஸ்.ரகுபதி,

சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் திறந்து வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை வைக்கிறார். கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் எம். பரமசிவம் அனைவரையும் வரவேற்கிறார். கவிச்சுடர் கவிதைப்பித்தன், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, பெரியண்ணன் அரசு, டாக்டர் வை.முத்துராஜா, அரு.வீரமணி, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா, கே.ஆர்.என்.போஸ், வி.என்.மணி, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, எம்.லியாகத் அலி, சு.சண்முகம், சுப.சரவணன், கீரை.தமிழ் ராஜா, ஆ.செந்தில், தென்னலூர் எம்.பழனியப்பன், செ.அசோக் பாண்டியன்,

ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், திலகவதி செந்தில், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, எம்.செந்தில்குமார், சி.ஆர்.வி.சித்ரா, டாக்டர் செ.குறிஞ்சிவாணன், ஸ்டாலின் நாராயணசாமி, மு.கலைஞர் கருணாநிதி, வை.நடராஜன், இளஞ்சேரன் முத்துச்சாமி, முல்லை முபாரக், வி.முத்துக் கிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், கே.எஸ்.சந்திரன், மு.க.ராம கிருஷ்ணன், சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன். ஓ.எஸ்.வெங்கடாச்சலம், என்.சேட்டு , மு.பி.ம.சத்திய சீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், உ.முருகேசன், வை.விஜயக்குமார், எம்.எஸ்.அக்பர் அலி, பி.அண்ணாதுரை மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் பேரூர் செயலாளர் எம்.ராஜா நன்றி கூறுகிறார்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

ரூ.10.80 கோடி மதிப்பிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள்!

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், ஜூலை 11- பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ரூ.10.80கோடி மதிப்பிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை துவக்கி வைத்தார்.

கரம்பியம் சின்ன ஏரி அருகில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.4 கோடி மதிப்பீட்டில் மேலமாத்தூர் ஆதனூர் சாலையில் உயர்மட்ட பாலம் கட்டும் பணியையும், கரம்பியம் முதல் பெரியம்மாபாளையம் வரை கிராம சாலை அமைக்கும் பணியையும், மூங்கில்பாடி ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.85.48 லட்சம் மதிப்பீட்டில் குன்னம் முதல் மூங்கில்பாடி வரை சாலை அமைக்கும் பணியையும், ஒதியம் ஊராட்சிக்குட்பட்ட சமத்துவபுரத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் பழுது நிலையிலிருக்கும் வீடுகள், சாலைகள் உள்ளிட்டவைகளின் பழுது நீக்கும் வகையில் புனரமைப்பு பணிகளையும்,

அசூர் பிரிவு சாலையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் அசூர் பேருந்து நிழற்குடை அமைக்கும் பணியையும், அந்தூர் மெயின் ரோடு பகுதியில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.16.21 லட்சம் மதிப்பீட்டில் அந்தூர் பொது தெருவில் சாலை அமைக்கும் பணியையும், ஆய்குடி பகுதியில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.56.10 லட்சம் மதிப்பீட்டில் கல்லம்புதூர் முதல் ஆய்குடி வரை சாலை அமைக்கும் பணியையும், கல்லம்பதூர் பகுதியில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம்ரூ.8.88 மதிப்பீட்டில் கல்லம்புதூர் பொது இணைப்பு சாலை அமைக்கும் பணியையும்,

முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.42.23 லட்சம் மதிப்பீட்டில் கல்லம்புதூர் ஆதிதிராவிடர் மயான சாலை அமைக்கும் பணியையும், பீல்வாடி பகுதியில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.45.04 லட்சம் மதிப்பீட்டில் பீல்வாடி முதல் அரும்டல் வரை சாலை அமைக்கும் பணியையும், பேரளி மெயின்ரோடு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் பேரளி பேருந்து நிழற்குடை அமைக்கும் பணியையும், பனங்கூர் பேருந்து நிறுத்தம் அருகில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.2.71 கோடி மதிப்பீட்டில் பேரளி முதல் பனங்கூர் வரை சாலை அமைக்கும் பணியையும்,

மருவத்தூர் பி.சி தெருவில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் மூலம் ரூ.27 லட்சம் மதிப்பீட்டில் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அமைக்கும் பணியையும் என மொத்தம் ரூ.10.80 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, வேப்பூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் முத்தமிழ்செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் அ.கருணாநிதி, நபார்டு மற்றும் கிராம சாலைகள் கோட்ட பொறியாளர் (நெ) பெ. வடிவேல் (திருச்சி), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட பொறியாளர் (நெ) கலைவாணி (பெரம்பலூர்), நபார்டு மற்றும் கிராம சாலை உதவி கோட்ட பொறியாளர் (நெ) ரா. ஹரிகிருஷ்ணன்(பெரம்பலூர்), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உதவி கோட்ட பொறியாளர்(நெ) தமிழ் அமுதன் (குன்னம்) மற்றும் உதவி பொறியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சீர்காழி வை. ஞானசேகரன்
ஜூலை 11 (2014)

அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் தமிழ்ப் பெருமன்ற செயலாளராக – மாணவர் திராவிட கழகத் தலைவராகவும் இருந்தபோது மாணவர்களை ஒருங்கிணைத்து தமிழின உணர்வு பொதுக்கூட்டம் தமிழீழ ஆதரவு பொதுக்கூட்டங்களை தொடர்ந்து நடத்தியதோடு, முதன்முதலாக தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்தவர்.

ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

கீழத் தஞ்சை மாவட்ட தி.க. செயலாளராக இருந்தபோது, ஈழத் தமிழர்களுக்கு மயிலாடுதுறையில் மிகப் பெரிய மாநாட்டை நடத்தியவர்.

அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் படிக்கும்போது மிசாவை கடுமையாக எதிர்த்து மாணவர்களிடம் துண்டறிக்கை வழங்கியவர்.

சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, 'கலைஞர் செம்மொழி நூலகம்', 'தளபதி மு.க.ஸ்டாலின் சிறுவர் விளையாட்டரங்கம்' ஆகியவற்றை அமைத்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்

தலைமைக் கழகம்
தி.மு.க.